DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
C.C. No.466/2022 P.W.5

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பிச்சைபாண்டியன் | த-பெ | மொக்கச்சாமி |
| ஊர்: | : | தேனி | | |
| வயது: | : | 62/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | காவல் ஆய்வாளர் ஓய்வு | மாவட்டம் | தேனி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.01.2026**

1 மற்றும் 2 **எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிற எதிரிகள் ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1. நான் தற்சமயம் தேனி மாவட்டத்தில் வசித்து காவல் ஆய்வாளராக பணி செய்து தற்போது பணி ஓய்வில் உள்ளேன். இதற்கு முன்பு காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் ஆய்வாளராக 14.04.2016 அன்று 14.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. செல்வம் அவர்களால் பதிவுசெய்த நிலைய குற்ற எண்.230/2016 147, 294(பி), 353, 506(2) இதச ன் கீழ் பதிவு செய்த வழக்கினை மேல் விசாரணைக்கு எனது பார்வைக்கு வைத்தார். வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்து வழக்கின் சம்பவ இடம் சென்று 14.04.2016 அன்று 15.30 மணிக்கு சம்பவ இட சாட்சிகள் ரமேஷ் மற்றும் முத்துக்குமார் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவை தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அசாஆ 4.**

2. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் 1 முதல் 8 வரையிலான எதிரிகளை தேடி சென்ற நிலையில் 14.04.2016 அன்று 17.15 மணிக்கு காரைக்குடி செக்காலை ரோடு பாண்டியன் தியேட்டர் முன்பு வைத்து வழக்கின் காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்க வழிகாவல் மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்வம் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் விசாரணை நிறைவு செய்து எதிரிகள் மீது குற்ற

முகாந்திரம் இருந்த காரணத்தால் 16.04.2016 அன்று மேற்சொன்ன பிரிவுகளின் அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. அசா1 முதல் அசா4 வரையிலான சாட்சிகள் அனைவரும் காவல் துறையை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எனது புலன்விசாரணையின் படி சம்பவ நேரம் மதியம் 2.00 என்றால் சரிதான். நான் எதிரிகளை கைது செய்ததாக சொல்லப்படும் நேரம் மாலை 5.15 மணி என்றால் சரிதான். எதிரிகள் சம்பவத்தை செய்துவிட்டு சுமார் 3 மணிநேரமும் அதே இடத்தில் நின்று கொண்டிருந்தார்கள் என்ற விபரத்தை எனது புலன் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை ஆனால் நான் கைது செய்தபோது சம்பவ இடத்தில் எதிரிகள் நின்றார்கள். நான் கைது செய்த இடத்தில் எதிரிகள் இல்லை என்றால் சரியல்ல. எனது புலன்விசாரணையில் அசா1 ஐ எதிரிகள் தாக்கியதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்த சமயத்தில் எதிரிகள் யாரேனும் வன்முறை சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் புகார்தார் காவல் பணியில் ஈடுபட்டிருந்தபோது இந்த எதிரிகளை ஓரமாக போ என சொன்னபோது நீ யாருடா என்னை ஓரமாக போக சொல்கிறாய் என்று அசிங்கமாக பேசி பக்கத்து கிடந்த கட்டையை எடுத்து இனிமேல் ஏதாவது பேசினால் உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என்று கட்டையை காட்டி மிரட்டினார்கள். மேற்படி கட்டையை கைப்பற்றி நீதிமன்றத்தில் சமர்பித்துள்ளேனா என்றால் இல்லை.

2. உண்மையாகவே எதிரிகள் கட்டையை காட்டி மிரட்டி இருந்தால் அதை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் 2 முதல் 11 எண்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன என்றால் சரிதான். சுட்டிக்காட்டப்பட்ட எண்கள் அனைத்தும் கடைகள் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற அன்று கடை அடைப்பு எதுவும் நடைபெறவில்லை என்றால் சரிதான் ஆனால் சில கடைகள் மேற்படி திரைப்படம் தெறி அன்றைய தேதியில் ரீலிஸ் ஆனதால் மூடப்பட்ட நிலையில் இருந்தது. எந்த எந்த கடைகள் மூடப்பட்டிருந்தது என்ற விபரத்தை மாதிரி வரைபடத்தில் சொல்லியுள்ளேனா என்றால் அதில் 11 எண் கடையானது பூட்டப்பட்டிருந்தது. சம்பவ இடமானது தியேட்டருக்கும் சாலையின் நடுபகுதிக்கு இடையில் உள்ளது என்றால் சரிதான்.

3. என்னுடைய விசாரணையில் அந்த பகுதியில் நிரந்தரமாக வசிக்கக்கூடிய நபர்களை விசாரணை செய்து சாட்சி பட்டியலில் இணைத்துள்ளீர்களா என்றால் அவர்கள் யாரும் சாட்சியம்

அளிக்க முன் வரவில்லை. அந்த நபர்கள் யாரையும் நான் சாட்சியாக விசாரணை செய்யவில்லை எனக்கு தோதான கையிருப்பு சாட்சிகளை விசாரணை செய்து அதன் அடிப்படையில் சாட்சிப்பட்டியலில் இணைத்து எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி திரைப்படம் ரீலிஸான தியேட்டரில் பிளேக்ஸ் விளம்பர பலகைகள் நிறுவப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி பலகைகள் பொறுத்தப்படவேண்டும் என்றால் அனுமதி பெற்று தான் நிறுவப்பட வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அனுமதியின்றி நிறுவப்பட்டிருந்த மேற்படி பிளேக்ஸ் பலகைகளை காவல் துறையினர் பறிமுதல் செய்து அதன்அடிப்படையில் அகற்றப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தற்போது நினைவில் இல்லை ஆனால் செய்திருக்கலாம். மேற்படி அனுமதி பெறவேண்டும் என்றால் நகராட்சி ஆணையரிடம் முன் அனுமதி பெறவேண்டும். பொதுவாக தியேட்டர் வாசல் முன்பு விளம்பர பதாகைகளில் நடிகர் மற்றும் ரசிகர் மன்ற உறுப்பினர்கள் புகைப்படம் மற்றும் பெயர்கள் இடம் பெற்றுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் நபர்களின் புகைப்படம் மட்டும் தான் இருக்கும் பெயர் குறிப்பிடப்பட்டிருக்காது.

4. வழக்கு சம்பவத்தின் போது அனுமதி பெற்ற எதிரிகள் வைத்த விளம்பர பலகைகளை நீக்கம் செய்தபோது ஏற்பட்ட முன் விரோத்தின் காரணமாக பதிவு செய்யப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளின் பெயர்கள் மேற்குறிப்பிடப்பட்ட விளம்பர பதாகைகளில் புகைப்படத்துடன் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தது என்றும் அதன் அடிப்படையில் அவர்கள் பெயர்களை இந்த வழக்கின் எதிரிகளாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் வழக்கு சமயத்தில் மதுபோதையில் இருந்ததாக தெரிந்து கொண்டேனா என்றால் அவர்கள் மது போதையில் இல்லை. எதிரிகள் நன்கு படித்த நபர்கள் என்று விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் மேற்படி நபர்கள் அனைவரும் ரசிகர் மன்றத்தை சேர்ந்தவர்கள் என்று தெரிந்து கொண்டேன். சார்பு ஆய்வாளர் பொதுமக்களிடம் மூர்க்கத்தனமாக நடந்து கொண்டதற்கு தனி வழக்குகள் நிலுவையில் இருந்து வந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் என்னுடைய பணிக்காலத்தில் இல்லை.

5. அசா2 ராஜா தன் மீது தனிநபர் வழக்கு நிலுவையில் உள்ளது என்று ஒப்புக்கொண்டுள்ளார் நான் அந்த விபரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரிகள் அனைவரும் அனுமதி பெற்று வைத்திருந்த பிளேக்ஸ் போர்டை அகற்றியதை எதிரிகள் ஆட்சேபனை செய்ததால் காவல் துறையை எதிர்த்து பேசுகிறாயா என்று புகார்தார் கொடுத்த பொய் புகாரை பெற்று எவ்வித விசாரணையும் செய்யாமல் அவசர கதியில் வழக்கு பதிவு செய்து எதிரிகளுக்கு எதிராக புலன்

விசாரணை அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புலன் விசாரணையில் சொல்லியதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.01.27 18:27:17 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.